Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129897

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 14/2024 Date: நாள் 23.10.2024

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 8
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.10.2024 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.30 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2024 Time : நேரம் 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1.5 கி.மீ தென் திசை
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கடலூர் மீச ரோட்டில் உள்ள வள்ளலார் கோயில் அருகில்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தி.திருவேங்கடம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.சுந்தர பாண்டியன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு செந்தில்குமார், மாவட்ட மேலாளர், TASMAC, கடலூர்.
2. திரு ராதாகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், அதே TASMAC அலுவலகம், கடலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ம: அனிதா Rank காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS உ.ம.த.க. பிரிவு கடலூர் on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 23/10/2024

[signature] 23/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2024 at 09.15 hrs

Name: பெயர் க. சத்தியராஜ்
Rank: நிலை காவல் துணைக் கண்காணிப்பாளர் No. எண் ..........
உ.ம.த. க. பிரிவு கடலூர்

**கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 14/2024, u/s 8 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் Column 12–ன் தொடர்ச்சி.**

நான் இன்று 23.10.2024 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது இப்பிரிவில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் சு.திருவேங்கடம், என்பவர் அலுவலகம் வந்து கணினி தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர், சு.திருவேங்கடம், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ஐயா, நான் தற்போது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழங்கப்பட்ட பணிகளான 1) கடலூர் வருவாய் மாவட்ட எல்லையில் அரசு ஊழியர்கள் ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகளில் கூறப்பட்ட குற்றங்கள் செய்கிறார்களா என்பதினை கண்காணித்தல். 2) அவ்வாறு மாவட்ட எல்லையில் அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகளில் கூறப்பட்ட குற்றங்கள் நடைபெறுகிறதா தெரியவந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், 3) அரசு அலுவலகங்களில் ஏதேனும் ஊழல் நடைபெறுவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் கிடைக்கப் பெற்றால் அவரின் வேண்டுகோலின் பேரில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் தலைமையில் சம்மந்தப்பட்ட அலுவலகத்தினை திடீர் ஆய்வு செய்ய அவருக்கு உதவியாக இருப்பது, 4) அரசு ஊழியர்களுக்கு எதிராக தனி நபர்கள் கொடுக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் சம்மந்தமான புகார் மனுவின் மீது வழக்கு பதிவு செய்து பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்வது, 5) அரசு ஊழியர்கள் ஊழல் தடுப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களை புரிந்துள்ளதாக தெரியவந்தால் ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநகரத்துக்கு அது சம்மந்தமாக விழிப்பு அறிக்கை அனுப்பி நடவடிக்கை எடுத்தல், 6) அரசு ஊழியர்கள் அவர்களது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்திருப்பதற்கான முகாந்திரம் இருந்தால் அது சம்மந்தமான விழிப்பு அறிக்கையினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்தல், 7) மாவட்டத்தில் அரசால் கட்டப்பட்டு வரும் பாலங்கள், சாலைகள், மதிப்பு 1 கோடிக்கு மேல் இருந்தால் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி செயலாக்கம் செய்யப்படுகிறதா என்பதினை கண்காணித்தல், 8) மேலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரின் உத்தரவின் பேரில் வழக்குகளை புலன் விசாரணை செய்தல்

23/10/2024

ஆகியவை எனது பணிகளாகும். கடந்த 16.09.2024ந் தேதி காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்திலும், 09.10.2024ந் தேதி புதுப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திலும் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும், தனி நபர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கடலூர் மாவட்டத்தில் கடந்த 14.10.2022ந் தேதி கடலூர் TASMAC அலுவலகத்திலும், 19.11.2020, 30.10.2021 ஆகிய தேதிகளில் கடலூர் மாவட்டத்தில் டாஸ்மார்க் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தற்போது தீபாவளி பண்டிகை முன்னிட்டு அரசு அலுவலகங்களில் மதிப்புறு பொருட்கள்/பணம்/ வெடிபொருட்கள் இனாமாக பெருவதை தடுக்கும் பொருட்டு தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறேன். இந்த நிலையில் 22.10.2024ந் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு 3 முறை 9787436436 என்ற எண்ணிலிருந்து தொடர்ந்து என்னுடைய 9488805333 என்ற எண்ணிற்கு Whats app call வந்தது. தொடர்ந்து வந்ததால் எனது செல்போனை ஆன் செய்து பேசினேன். மறுமுனையிலிருந்து பேசிய ஆண் நபர் தனது பெயர் ராதாகிருஷ்ணன் என்றும், தான் கடலூர், அரசு TASMAC அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு கடலூர் லஞ்ச ஒழிப்பு துறைக்கு வழக்கு சம்மந்தமாக ஆவணங்களை ஒப்படைக்க நான் வந்த போது அங்கு பணிபுரியும் காவலர் ஜெயக்குமார் என்பவர் எனக்கு அறிமுகமானார் என்றும், என்னிடம் அவரை அறிமுகப்படுத்திக்கொண்டார். நான் அவரிடம் தொடர்ந்து பேசிய போது தான் பணிபுரியும் அலுவலகத்தில் மாவட்ட மேலாளராக திரு.செந்தில்குமார் என்பவர் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் என்னிடம் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் அடிக்கடி TASMAC ஊழியர்களுக்கு எதிராக வழக்கு போட்டு வருகிறார்கள். "நீ கடலூர்காரர் தானே யாரையாவது தொடர்பு கொண்டு எனக்கு எதிராகவும், துறைக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும், மேலிட உத்திரவுபடி நடவடிக்கை எடுக்க வேண்டிய பட்சத்தில் முன்கூட்டியே எனக்கு தகவல் தெரிவிக்க அந்த பிரிவில் பணிபுரியும் அதிகாரிகளை நமக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்ள ஏற்பாடு செய்யுமாறு சொன்னார். அது எப்படி சார் சாத்தியப்படும் என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் நாம் வசூல் செய்யும் பணத்தில் ஒரு பகுதியை மாதாமாதம் அவர்களுக்கும் மாமூலாக கொடுத்துவிடலாம் என கூறினார்". அதனால் தான் நான் உங்களிடம் பேசுகிறேன் சார் Help பண்ணுங்க சார் என்றும் சொன்னார். மேலும் இரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்காக Whats app call–ல் பேசுவதாக கூறினார். அவருடைய பேச்சிலிருந்து கடலூர் TASMAC

23/10/2024

மேலாளர் எனக்கு தேவையற்ற சட்டவிரோதமான ஆதாயம் ஏதேனும் தர முற்படுவதை உணர்ந்தேன். அவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்தேன். அதனை தொடர்ந்து 22.10.2024ந் தேதி மாலை சுமார் 07.15 மணிக்கு 9787436436 என்ற எண்ணிலிருந்து எனது Whats app எண்ணிற்கு ராதாகிருஷ்ணன் என்னை தொடர்பு கொண்டார். அப்போது அவர் தானும் கடலூர் TASMAC மேலாளர் செந்தில்குமார் அவர்களும் என்னை சந்திக்க இருப்பதாகவும் 07.30 மணிக்கு கடலூர் பீச் ரோட்டில் உள்ள வள்ளலார் கோயில் அருகில் வருவதாகவும், சந்திப்பதற்கு அங்கு வரமுடியுமா சார் என்று கேட்டார். அவர் பேசியதிலிருந்து எனக்கு தேவையற்ற சட்டவிரோதமான ஆதாயம் ஏதேனும் தர முற்படுவதை உணர்ந்தேன். மேலும் நான் அவர்களது என்னஓட்டத்தினை தெரிந்து கொள்ளும் நோக்கில் அவர்களை சந்திக்கலாம் என முடிவு செய்து சந்திப்புக்கு வருவதாக அவரிடம் கூறினேன். அதன்படி 22.10.2024ந் தேதி மாலை சுமார் 07.30 மணியளவில் கடலூர் பீச் ரோட்டில் உள்ள வள்ளலார் கோயில் அருகே கடலூர் TASMAC மேலாளர் செந்தில்குமார் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களை சந்தித்தேன். அப்போது செந்தில்குமார் அவர்கள் நான் கடலூர் TASMAC மேலாளராக பணிப்பொறுப்பேற்று 3 மாதங்கள் ஆகின்றது என்றும், எனக்கு எந்த பிரச்சனையும் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள், தவிர்க்க முடியாத பட்சத்தில் TASMAC அலுவலகத்திற்கு ரெய்டு வருவதாக இருந்தால் முன்கூட்டியே தகவல் சொல்லிவிடுங்கள் சார். நான் மாதாமாதம் ரூ.15,000/–த்தை கொடுத்து அனுப்பி விடுகிறேன் என்று சொன்னார். மேலும் தீபாவளி பண்டிகை செலவிற்காக ரூ.25,000/–ஐ நாளை 23.10.2024ந் தேதி காலை 11.30 மணிக்கு இதே இடத்திற்கு தனது அலுவலக இளநிலை உதவியாளர் ராதாகிருஷ்ணனிடம் கொடுத்து அனுப்புவதாகவும். அந்த பணத்தை வாங்கி கொள்ளுங்கள் என்று கூறினார். மேற்கண்ட உரையாடலிலிருந்து TASMAC மேலாளர் செந்தில்குமார் எனக்கு லஞ்சம் கொடுக்க முன்வருவது தெரியவந்ததால் இன்று 23.10.2024ந் தேதி TASMAC அலுவலக இளநிலை உதவியாளர் ராதாகிருஷ்ணன் சொல்லும் இடத்திற்கு சென்று அவரை நேரில் சந்திக்க உள்ளேன். அவர்களுக்கு சாதகமாக அலுவலக பணியை செய்ய என்னை ரூ.25,000/– கையூட்டாக பெற்றுக்கொள்ளுமாறு அவர்கள் தூண்டுகிறார்கள். அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் ரூ.25,000/– பெற்றுக் கொண்டு அவர்களுக்கு சாதகமாக எனது அலுவலக பணியை செய்ய எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே எனக்கு கையூட்டாக பணம் ரூ.25,000/–ஐ என்னை பெற்றுக்கொள்ளுமாறு தூண்டும் கடலூர் TASMAC மேலாளர் செந்தில்குமார் மற்றும் இளநிலை உதவியாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு

23/10/2024

கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள (ஒப்பம்.xxxxxxx), 23/10/2024 [சு.திருவேங்கடம், காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, கடலூர்]

Sir,

Received the above computer typed complaint on 23.10.2024 at about 07.00 hrs., and a quiet and quick verification was made on the general reputation of the accused and found to be bad. The motives, reliability and the antecedents of the complainant were also verified through sources. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.14/2024, U/s 8 of the PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 23.10.2024 at 08.30 hrs., sd/-xxxxx 23/10/2024 (K.Sathiyaraj), Deputy Superintendent of Police, V & AC, Kallakurichi, FAC Cuddalore.

23 10 2024

K. Sathiyaraj

Deputy superintendent of Police

V&AC, Kallakurichi,

Cuddalore (FAC).